## سُوْرَةُ الْبَلَدِ مَكِّيَّةٌ وَّهِيَ عِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

لَآ اُقْسِمُ بِهٰذَا الْبَلَدِ ۙ ﴿١﴾ وَاَنْتَ حِلٌّۢ بِهٰذَا الْبَلَدِ ۙ ﴿٢﴾ وَوَالِدٍ وَّمَا
وَلَدَ ۙ ﴿٣﴾ لَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ فِيْ كَبَدٍ ؕ ﴿٤﴾ اَيَحْسَبُ اَنْ لَّنْ يَّقْدِرَ
عَلَيْهِ اَحَدٌ ۘ ﴿٥﴾ يَقُوْلُ اَهْلَكْتُ مَالًا لُّبَدًا ؕ ﴿٦﴾ اَيَحْسَبُ اَنْ لَّمْ يَرَهٗۤ وقف لازم
اَحَدٌ ؕ ﴿٧﴾ اَلَمْ نَجْعَلْ لَّهٗ عَيْنَيْنِ ۙ ﴿٨﴾ وَلِسَانًا وَّشَفَتَيْنِ ۙ ﴿٩﴾ وَهَدَيْنٰهُ
النَّجْدَيْنِ ۚ ﴿١٠﴾ فَلَا اقْتَحَمَ الْعَقَبَةَ ۖ ﴿١١﴾ وَمَآ اَدْرٰىكَ مَا الْعَقَبَةُ ؕ ﴿١٢﴾ فَكُّ
رَقَبَةٍ ۙ ﴿١٣﴾ اَوْ اِطْعٰمٌ فِيْ يَوْمٍ ذِيْ مَسْغَبَةٍ ۙ ﴿١٤﴾ يَّتِيْمًا ذَا مَقْرَبَةٍ ۙ ﴿١٥﴾
اَوْ مِسْكِيْنًا ذَا مَتْرَبَةٍ ؕ ﴿١٦﴾ ثُمَّ كَانَ مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا وَتَوَاصَوْا
بِالصَّبْرِ وَتَوَاصَوْا بِالْمَرْحَمَةِ ؕ ﴿١٧﴾ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْمَيْمَنَةِ ؕ ﴿١٨﴾
وَالَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِنَا هُمْ اَصْحٰبُ الْمَشْئَمَةِ ؕ ﴿١٩﴾ عَلَيْهِمْ نَارٌ مُّؤْصَدَةٌ ﴿٢٠﴾ ع ١٥

## سُوْرَةُ الشَّمْسِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

وَالشَّمْسِ وَضُحٰىهَا ۪ۙ ﴿١﴾ وَالْقَمَرِ اِذَا تَلٰىهَا ۪ۙ ﴿٢﴾ وَالنَّهَارِ اِذَا
جَلّٰىهَا ۪ۙ ﴿٣﴾ وَالَّيْلِ اِذَا يَغْشٰىهَا ۪ۙ ﴿٤﴾ وَالسَّمَآءِ وَمَا بَنٰىهَا ۪ۙ ﴿٥﴾

அத்தியாயம் : 90

## அல் பலத் _ நகரம்

வசனங்கள் : 20 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) இந்த (மக்கா) நகரத்தின் மீது நான் சத்தியம் செய்கிறேன்,
2. இந்நகரத்தில் (போர்செய்வது சற்றுநேரம் உமக்கு ஆகுமாக்கப் பட்டதாக இருக்க) நீர் தங்கியிருக்கும் நிலையில்.
3. தந்தையின் மீதும், பிறந்தோ(ராகிய சந்ததியின)ரின் மீதும் சத்தியமாக,
4. திடமாக நாம் மனிதனைக் கஷ்டத்தில் (உள்ளவனாகப்) படைத்திருக்கின்றோம்.
5. "நிச்சயமாக ஒருவரும் (தன்னை தண்டிக்க) தன்மீது சக்தி பெறவே மாட்டார்" என அவன் எண்ணிக்கொள்கிறானா?
6. "ஏராளமான பொருளை நான் (முஹம்மதின் விரோதத்திற்காக) அழித்திருக்கிறேன்" என்று (ஹாரிஸாகிய) அவன் (ஆணவமாகக்) கூறுகின்றான்.
7. நிச்சயமாக ஒருவருமே தன்னை பார்க்கவில்லையென்று அவன் எண்ணிக் கொள்கின்றானா?
8. இரு கண்களை அவனுக்கு நாம் அமைக்கவில்லையா?
9. ஒரு நாவையும், இரு உதடுகளையும் (நாம் அவனுக்கு அமைக்கவில்லையா?)
10. மேலும், (நன்மை, தீமையாகிய) இரு வழிகளை நாம் அவனுக்குக் காண்பித்து விட்டோம்.
11. எனினும் (இது வரையில்) அவன் "அகபா"வைக் கடக்கவில்லை.
12. (நபியே!) "அகபா" என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
13. (அது தான்) ஓர் அடிமையை விடுதலை செய்தலாகும்.
14. அல்லது பசியுடைய நாளில் உணவளித்தலாகும்_
15. (யாருக்கெனில்) நெருங்கிய உறவுடைய ஓர் அநாதைக்கு;
16. அல்லது (வறுமையால்) மண்ணில் உழலும் ஏழைக்கு (உணவளிப்பதாகும்).
17. பின்னர் விசுவாசங் கொண்டு, பொறுமையைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (அல்லாஹ்வின் அடியார்களுக்கு) அன்புசெலுத்துமாறு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்துகொண்டும் இருந்தோரில் உள்ளவராக அவர் இருப்பதாகும்.
18. இத்தகையோர் தாம் வலப்புறத்தை உடையோர்.
19. இன்னும், நம்முடைய வசனங்களை நிராகரிக்கின்றார்களே, அத்தகையோர்_ அவர்கள் இடப்புறத்தையுடையோர்.
20. அவர்கள் மீது (எல்லாப்பக்கமும்) மூடப்பட்ட நெருப்பு இருக்கும்.

அத்தியாயம் : 91

## அஷ்ஷம்ஸ் _ சூரியன்

வசனங்கள் : 15 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. சூரியன் மீதும், அதன் பிரகாசத்தின் மீதும் சத்தியமாக_
2. சந்திரன் மீதும் சத்தியமாக_ அது அ(ச்சூரியனாகிய)தை அடுத்து தொடர்ந்துவிடும்போது_
3. பகலின் மீதும் சத்தியமாக_ அது அ(ச்சூரியனாகிய)தை வெளிப்படுத்தி விடும்போது_
4. இரவின் மீதும் சத்தியமாக_ அது அ(ச்சூரியனாகிய)தை மூடிக்கொண்டு விடும்போது_
5. வானத்தின் மீதும், அதை (ஒழுங்குற) அமைத்தவன் மீதும் சத்தியமாக_